CSI தூத்துக்குடி – நாசரேத் திருமண்டலம்

# GLOBAL MISSIONARY SOCIETY


Estd. : 2005

# குளோபல் மிஷனெரி சங்க மலர்

மலர் - 22 இதழ் - 09 செப்டம்பர் - 2026



தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி பணித்தள சபையார் மற்றும் சகோதரி. S.ஜோஸ்லின் செலினா அவர்கள் குடும்பத்தின் சார்பிலும் ஆதரித்து வரும் மிஷனெரிகள் நம்முடைய பொதுக்காரியதரிசி ஐயா அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள்.



தருமபுரி மாவட்டம், C. பள்ளிப்பட்டி பணித்தளத்தில் புதிதாக ஆலயம் கட்ட இலவசமாக 5 சென்ட் இடம் கொடுத்த திரு. முருகேசன் அவர்கள் குடும்பத்தினர்களை GMS குடும்பமாக வாழ்த்தி நன்றி கூறுகிறோம்.

ஆயத்தப்படு.... அறிவித்திடு... ஆதாயப்படுத்து...

**President**
**Mr. P. Jefferson Samuel Raj**
Global Missionary Society

**Vice President**
**Rev. Dr. A. Devarajan**
M.A.,M.Sc.,B.D.,D.Min.,
Global Missionary Society,

**Treasurer**
**Mr.A. Kanagaraj**
Global Missionary Society

**Joint Secretary**
**Rev.P. Johnson Daniel**
D.Pharm.,M.A.,B.Th.,
Global Missionary Society,

**General Secretary**
**Rev. V. Samuel Ravi Raj** M.A.,M.Sc.,MSW.,LLB.,B.D.,
Global Missionary Society.





தருமபுரி மாவட்டம்,
பாப்பிரெட்டிப்பட்டி சபையில்
நடைபெற்ற
மிஷனெரி பிரதிஷ்டை



ஜெருசலேம் திருச்சபையில்
நடைபெற்றஅபிவிருத்தி ஊழியம்





சுந்தர்நகர் திருச்சபையில் நடைபெற்ற
உபவாசக் கூடுகை



இராஜகோபால் நகர் சேகரம் சில்வர்புரம் சபை
மக்கள் 21, 22.8.2026 ஆகிய தேதிகளில்
GMS பணித்தளங்களுக்கு வந்து பார்வையிட்டு
சுவிசேஷ ஊழியமும் செய்தார்கள் மிகவும்
சிறப்பாக அமைந்தது சேகர தலைவர்
அருள்திரு. இரவி ஐயா அவர்களுக்கும் சபை
மூப்பர்கள் மற்றும் திரு. ஜான்சன் அவர்களுக்கும்
நன்றி கூறுகிறோம்



மிஷனெரிகள் கிராமங்களுக்கு சென்று இயேசுவை
அறியாத மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்



திருப்பத்தூர் மாவட்டம், திரயாலம்
பணித்தள ஆலயத்தின் 15-து
ஆண்டுபிரதிஷ்டை பண்டிகையில்
கலந்துகொண்ட சபை மக்கள்

# G.M.S. மலர்

அறிவித்திடு ஆதாயப்படுத்திடு இணைத்திடு GMS

# குளோபல் மிஷனெரி சங்கம்

இதழின் உள்ளே...


| | பக்கம் |
|---|---|
| ◈ பொதுக்காரியதரிசி யிடமிருந்து | 2 |
| ◈ பணித்தள செய்திகள் | 7 |
| ◈ பணித்தளத் தேவைகள் | 23 |
| ◈ அபிவிருத்தி ஊழியர்களின் விவரங்கள் | 28 |
| ◈ வாலிபர் பகுதி | 29 |
| ◈ சரியான விடை | 31 |
| ◈ திருமறையில் தேடுவோம் | 32 |


## நமது பணிகள்

- ❖ நற்செய்தி அறிவித்தல்
- ❖ சமுதாயப் பணிகள்
- ❖ இலவச தையல்பயிற்சி பள்ளி
- ❖ மருத்துவ ஊழியம்
- ❖ விசுவாசிகளை திருச்சபைகளில் இணைத்தல்
- ❖ புதிய பணித்தளங்களை உருவாக்குதல்
- ❖ பணித்தளங்களில் ஆலயம் கட்டுதல்

தனிப்பிரதி ரூ.10/-
ஆண்டு சந்தா ரூ.100/-
ஆயுள் சந்தா ரூ.1000/-


**பொதுக்காரியதரிசி**
TND – குளோபல் மிஷனெரி சங்கம்
368/11, W.G.C. ரோடு,
தந்தி ஆபிஸ் ரோடு
தூத்துக்குடி – 628 001
போன்: 0461 – 2328911
செல்:9487674959


*உங்கள் அனைத்து காணிக்கைகளையும் சுலபமாக வங்கி மூலம்நேரடியாக எங்கள் வங்கி கணக்கில் செலுத்தி விடலாம். செலுத்துபவர்கள் உங்கள் பெயர்மற்றும் முகவரியை எங்களுக்கு மறவாமல் தொலைபேசியின் மூலம் தெரியப்படுத்துங்கள். மேலும் சுலபமாக இணையவழி மூலமாகவும் அனுப்பலாம்.*

*A/C.Name:- TND Global Missionary Society*

*மாதாந்திர காணிக்கை அனுப்பவேண்டிய வங்கி*

| Bank | IFSC Code No. | Br.Code. | A/C.No. |
|---|---|---|---|
| TamilNadu Mercantile BankTut., | TMBL0000001 | 001 | 001100050302832 |

*ஆலயக் கட்டுமானப் பணிக்காக காணிக்கை அனுப்பவேண்டிய வங்கி*

| Bank | IFSC Code No. | Br.Code. | A/C.No. |
|---|---|---|---|
| Canara Bank | CNRB0001124 | 001 | 63902200066180 |
| Canara Bank | CNRB001124 | 001 | 63902200062946 |






மிஷனெரி பணி என்பது சிலருடைய வேலை மட்டுமல்ல. கிறிஸ்துவின் சுவிசேஷம் உலகின் கடைசி மனிதனையும் சென்றடைய வேண்டும் என்பது முழு திருச்சபையின் பொறுப்பு. அதனால் மூன்று முக்கியமான கடமைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**மிஷனெரிகளை அனுப்புவது – நமது கடமை (ரோமர் 10 : 14-15)**

“அவர்கள் கேள்விப்படாதவரை எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்?” இந்த வசனத்தில் ஒரு அழகான தொடர் இருக்கிறது: அனுப்பப்படுதல் → பிரசங்கித்தல் → கேட்பது விசுவாசித்தல் → இரட்சிப்பு. ஒரு மிஷனெரி ஒரு கிராமத்திற்குச் செல்லும்போது, ஒரு குடும்பத்திற்குச் செல்லும்போது, ஒரு தொலைதூரப் பகுதிக்குச் செல்லும்போது, அவர் தனியாகச் செல்லவில்லை. அவரைப் பின்னால் நிறுத்தும் திருச்சபையும் அவருடன் செல்கிறது. நாம் எல்லோரும் வெளிநாட்டிற்கோ, தொலைதூர கிராமங்களுக்கோ சென்று மிஷனெரியாகப் பணியாற்ற முடியாமல் இருக்கலாம். ஆனால் நாம் அனுப்ப முடியும். சிந்திக்க வேண்டிய கேள்வி:

**“கர்த்தாவே, நான் போக முடியாவிட்டாலும், போகிற ஒருவரை அனுப்புவதற்கு என்ன செய்யப் போகிறேன்?”**

“இதோ நான் இருக்கிறேன், என்னை அனுப்பும்.”(ஏசாயா 6 : 8) ஒருவர் சொல்ல வேண்டும்; ஆனால் அவரை அனுப்புவதற்கு திருச்சபை தயாராக வேண்டும். மிஷனெரிகளுக்காக ஜெபிப்பது நமது பரிசுத்த கடமை. பவுல் அப்போஸ்தலன் தன்னுடைய ஊழியத்திற்காக பணம் மட்டும் கேட்கவில்லை. ஜெபிக்கும்படி கேட்டார். 2 தெசலோனிக்கேயர் 3 : 1 சகோதரரே, கர்த்தருடைய வசனம் உங்களிடத்தில் பரவிப் பிரகாசிப்பதற்காக எங்களுக்காக ஜெபியுங்கள். மேலும் கொலோசெயர் 4 : 3 “எங்களுக்காக ஜெபியுங்கள்; தேவன் எங்களுக்காக வசனத்திற்குத் திறந்த வாசலைத் திறக்கும்படி....” மிஷனெரி செல்லும் இடத்தில் பல சவால்கள் இருக்கலாம். எதிர்ப்பு இருக்கலாம். பொருளாதாரக் குறைபாடு இருக்கலாம். தனிமை இருக்கலாம். உடல் சோர்வு இருக்கலாம். சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு இருக்கலாம். ஆகவே மிஷனெரியின் பின்னால்

முழங்காலில் நிற்கும் ஒரு ஜெபக்கூட்டம் தேவை.

ஒரு முக்கியமான உண்மை. மிஷனெரி களத்தில் போராடுகிறார்; ஜெபிக்கும் திருச்சபை அவருக்குப் பின்னால் போராடுகிறது. எபேசியர் 6 : 18-19-லும் பவுல் தனக்காக ஜெபிக்கும்படி கேட்கிறார். எனவே, ‘‘அவர்களை அனுப்பிவிட்டோம்; அவர்களுடைய வேலை அவர்களுடையது’’ என்று சொல்ல முடியாது. அவர்கள் செல்லும் இடமெல்லாம் நமது ஜெபமும் செல்ல வேண்டும். மிஷனெரிகளை பொருளாதாரமாகத் தாங்குவது- நம்மீது விழுந்த கடமை. மிஷனெரிகளை அனுப்புவது மட்டும் போதாது. அவர்கள் ஊழியம் செய்யத் தேவையான ஆதரவை நாம் கொடுக்க வேண்டும். 3 யோவான் 1 : 8 மிகவும் முக்கியமான வசனம். யோவான், சுவிசேஷத்திற்காக வெளியே சென்ற ஊழியர்களை விசுவாசிகள் ஆதரித்ததைப் பாராட்டுகிறார்.

3 யோவான் 1:6-8 ‘‘நீ தேவனுக்குப் பிரியமாய்ச் செய்யும் காரியத்தைச் செய்வாய்.... ஆகையால் இப்படிப்பட்டவர்களை நாம் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இங்கே ‘‘கடமைப்பட்டிருக்கிறோம்’’ என்ற கருத்து மிகவும் வலிமையானது. மிஷனெரிக்கு உதவி செய்வது வெறும் ‘‘நல்ல மனது இருந்தால் செய்யலாம்’’என்ற விஷயம் அல்ல.

## சுவிசேஷ ஊழியத்தைத் தாங்குவது திருச்சபையின் பொறுப்பு

பிலிப்பியர் 4 : 15-17 பிலிப்பிய சபை பவுலுடைய ஊழியத்தை பொருளாதாரமாக ஆதரித்தது. பவுல் அவர்களிடம் ‘‘எனக்குக் காணிக்கை வேண்டும்’’ என்பதற்காக மட்டும் நன்றி சொல்லவில்லை. அவர்கள் சுவிசேஷப் பணியில் பங்காளிகளாக இருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். அதாவது: மிஷனெரி களத்திற்குச் செல்கிறார். நாம் காணிக்கையால் அவருடன் செல்கிறோம். அவர் ஆயிரம் மைல் சென்று சுவிசேஷம் அறிவிக்கும்போது, நாம் கொடுக்கும் காணிக்கை அந்த ஊழியத்தில் நமது பங்காகிறது.

## மிஷனெரி பணியை ஆதரிப்பது ஏன் இவ்வளவு முக்கியம்?

2கொரிந்தியர் 5 : 10 நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும். ஒவ்வொருவரும் தம்முடைய வாழ்க்கைக்காக தேவனுக்கு கணக்கு கொடுக்கவேண்டும். மேலும் ரோமர் 14 : 12 ‘‘ஆகையால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.’’இதன் அடிப்படையில் நாம் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். ‘‘கர்த்தர் எனக்குக் கொடுத்த பணம், நேரம், திறமை, ஜெபம், வாய்ப்பு ஆகியவற்றை சுவிசேஷத்திற்காக நான் எவ்வளவு

பயன்படுத்தினேன்?"நாம் எல்லோரும் மிஷனெரியாகச் செல்ல வேண்டியதில்லை. ஆனால்:

செல்வபர்களை அனுப்பலாம்

செல்பவர்களுக்காக ஜெபிக்கலாம்.

செல்பவர்களைத் தாங்கலாம்

ஒரு மிஷனெரி செல்லும்போது, அவர் மட்டும் செல்லவில்லை.

அவருடைய பின்னால் ஒரு திருச்சபை செல்ல வேண்டும்.

அவருடைய பின்னால் ஜெபிக்கும் முழங்கால்கள் இருக்க வேண்டும்.

அவருடைய பின்னால் காணிக்கை கொடுக்கும் கரங்கள் இருக்க வேண்டும்.

மிஷனெரியை அனுப்புவது ஒரு சிலருடைய பொறுப்பு அல்ல; கிறிஸ்துவின் திருச்சபையாகிய நம்முடைய பொறுப்பு. இன்று நாம் ஒரு தீர்மானம் எடுப்போம்: "கர்த்தாவே, நான் செல்ல முடியாவிட்டாலும், செல்பவரை அனுப்புவேன். நான் அவருடன் செல்ல முடியாவிட்டாலும், அவருக்காக ஜெபிப்பேன்; நான் அவருடன் களத்தில் நிற்க முடியாவிட்டாலும், என் காணிக்கையால் அவரைத தாங்குவேன்."

**"அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள். மத்தேயு 9 : 37-38**

## நடைபெற்ற மிஷனெரி பிரதிஷ்டை:

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 11.08.2026 தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி திருச்சபையாரால் மற்றும் திருமதி.S. ஜோஸ்லின் செலினா அவர்கள் குடும்பத்தாரால் ஆதரிக்கப்படும் கள்ளக்குறிச்சி மாவட்டம், மரூர் பணித்தளத்தில் ஊழியம் செய்யும் சகோ. ஜெயபிரகாசம் அவர்களும் திருவண்ணாமலை மாவட்டம், கனந்தம்பூண்டி பணித்தளத்தில் ஊழியம் செய்யும் சகோ. ஜெயபிரகாசம் அவர்களும் நம்முடைய GMS பொதுக்காரியதரிசி ஐயா அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இம்மிஷனெரிகளை ஆதரிக்கும் பாப்பிரெட்டிப்பட்டி திருச்சபையாருக்கும், சகோதரி. S.ஜோஸ்லின் செலினா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஞானஸ்நானம்:

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 11.08.2026 அன்று திருப்பத்தூர் மாவட்டம், திரயாலம் பணித்தளத்தில் கிறிஸ்துவுக்கு தங்கள் வாழ்வை அர்ப்பணித்த 5 பேர்களுக்கு பொதுக்காரியதரிசி ஐயா அவர்களால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டார்கள்.

## நடைபெற்ற அபிவிருத்தி ஊழியம்:

| வ. எண் | தேதி | இடம் | ஊழியம் |
|---|---|---|---|
| 1 | 02.08.2026 | பிள்ளைவிளை | ஞாயிறு ஆராதனை |
| 2. | 06.08.2026 | ஏழுவரைமுக்கி | GMS ஜெபம் |
| 3 | 06.08.2026 | கிறிஸ்தியாநகரம் | GMS ஜெபம் |
| 4 | 07.08.2026 | மில்லர்புரம் | உபவாச ஜெபம் |
| 5 | 07.08.2026 | ஜெருசலேம் | GMS ஜெபம் |
| 6 | 08.08.2026 | சுந்தர்நகர் | உபவாச ஜெபம் |
| 7 | 09.08.2026 | ஜெருசலேம் | ஞாயிறு ஆராதனை |
| 8 | 09.08.2025 | வெள்ளாளன்விளை | ஞாயிறு ஆராதனை |
| 9 | 09.08.2026 | திருச்செந்தூர் | GMS ஜெபம் |
| 10 | 11.08.2026 | பண்டாரஞ்செட்டிவிளை | GMS ஜெபம் |
| 11 | 14.08.2026 | நளராஜபுரம் | GMS துதி ஆராதனை |
| 12 | 16.08.2026 | குளத்துகுடியிருப்பு | ஞாயிறு ஆராதனை |
| 13 | 16.08.2026 | ஆசீர்வாதபுரம் | ஞாயிறு ஆராதனை |
| 14 | 16.08.2026 | கல்விளை | ஞாயிறு ஆராதனை |
| 15 | 23.08.2026 | K. சண்முகபுரம் | ஞாயிறு ஆராதனை |

இதற்கான வாய்ப்புகளை கொடுத்த சேகரத் தலைவர்கள், சபை ஊழியர்கள் அனைவருக்கும், திருமண்டல பெருமன்ற உறுப்பினர்கள், சேகர செயலர்கள், பொருளாளர்கள், சேகர கமிட்டி அங்கத்தினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## நடைபெறவிருக்கும் விற்பனை விழா:

| வ. எண் | தேதி | இடங்கள் |
|---|---|---|
| 1 | 10.09.2026 | ஆனந்தபுரம் |
| 2 | 13.09.2026 | டூவிபுரம் |

ஆகிய இடங்களில் விற்பனை விழாக்கள் நடைபெற ஏற்பாடுகளை செய்து தந்த ஆனந்தபுரம் சேகரத் தலைவர் Rev.S. தினகரன் சாலமோன் ஐயா அவர்களுக்கும், தொடக்கப்பள்ளி & நடுநிலைப்பள்ளி மேலாளர் மற்றும் டூவிபுரம் சேகரத் தலைவர் Rev.Dr.A. தேவராஜன் ஐயா அவர்களுக்கும், சபை ஊழியர்கள் மற்றும் சபை மக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## பொதுக்காரியதரிசியின் செப்டம்பர் மாத ஊழியங்கள்...

| வ. எண் | தேதி | ஊழியங்கள் | இடம் |
|---|---|---|---|
| 1 | 10.09.2026 | விற்பனை விழா | ஆனந்தபுரம் இம்மானுவேல் ஆலயம் |
| 2 | 12.09.2026 | பிரதிஷ்டை பண்டிகை தூய மிகாவேல் ஆலயம் | மரூர் பணித்தளம் |
| 3 | 13.09.2026 | விற்பனை விழா | டூவிபுரம் தூய யாக்கோபு ஆலயம் |
| 4 | 13.09.2026 | ஆராதனையில் – தேவசெய்தி மாலை : GMS கலை நிகழ்ச்சிகள் | தூய பேதுரு ஆலயம், சண்முகபுரம், |
| 5 | 15.09.2026 | மிஷனெரிகளின் உபவாசக் கூடுகை | சிந்தல்பாடி பணித்தளம் |
| 6 | 24.09.2026 | பிரதிஷ்டை பண்டிகை யோவான்ஸ்நானகன் ஆலயம் | குருபரஹள்ளி பணித்தளம் |
| 7 | 27.09.2026 | விற்பனை விழா | தூய பேதுரு ஆலயம், சண்முகபுரம், |
| 8 | 28.09.2026 | அபிவிருத்தி ஊழியர்கள் கூடுகை | GMS அலுவலகம் |

**கிறிஸ்துவின் அறுவடைப் பணியில்,**



**Rev. V. சாமுவேல் ரவிராஜ்**

M.A.,M.Sc.,MSW.,LLB.,B.D.,

**பொதுக்காரியதரிசி, GMS.**

# பணித்தளச் செய்திகள்

## துதியுங்கள் / ஜெபியுங்கள்

### தருமபுரி மாவட்டம்
### நாகலூர்

**துதிக்க**

* விஜயலட்சுமி என்ற சகோதரிக்கு ஏற்பட்ட விபத்தில் பெரிய ஆபத்து இல்லாமல் சிறிய காயங்களோடு தேவன் பாதுகாத்ததற்காக....
* சக்திநகர், காளியா கோவில் ஆகிய புதிய கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக.....

**ஜெபிக்க**

- திருமலாய் என்ற சகோதரிக்கு காலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது விரைவில் நல்ல சுகம் கிடைக்கும் படியாக....
- பின்வாங்கி போன உண்ணாமலை என்ற சகோதரி மீண்டும் ஆலயத்திற்கு வரும்டியாக......
- ரினாஸ் என்ற சகோதரர் விபத்துக்குள்ளாகி காயமடைந்து மருத்துவ மனையில் இருக்கிறார். விரைவில் நல்ல சுகம் கிடைக்கும்படியாக....

**சகோதரர்.C. பவுல்விஸ்வநாதன்**

### ஜம்மணஹள்ளி

**துதிக்க**

* முனியம்மாள் என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் பிசாசின் பிடியிலிருந்து கர்த்தர் கொடுத்த விடுதலைக்காக....
* ஒரு மாதமாக ஆலயத்திற்கு வராமலிருந்த தமிழ் என்ற சகோதரன் ஜெபத்தின் மூலம் ஆலயத்திற்கு வந்ததற்காக...
* பிரகாசம் என்ற சகோதரருக்கு கையில் ஏற்பட்ட காயங்களை தேவன் மாற்றியதற்காக...

**ஜெபிக்க**

- இந்திராகாந்தி என்ற சகோதரியின் கடன் பிரச்சனையை தேவன் மாற்றி சமாதானத்தை கொடுக்கும் படியாக....
- வினிதா என்ற சகோதரிக்கும் அவருடைய கணவருக்கும் உள்ள கருத்து வேறுபாடு நீங்கி சமாதானமாய் வாழும்படியாக...
- நதியா மாரிமுத்து இவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் படியாக...

**சகோதரி. எஸ்தர் டேனியேல்**

## அடிமலைப்புதூர், பட்டுக்கோணம்பட்டி,சமத்துவபுரம்

### துதிக்க



✳ எபினேசர் என்ற சகோதரரின் பேரனுக்கு ஏற்பட்ட காய்ச்சல், மயக்கம், வாந்தி ஜெபத்தின் மூலம் சுகமானதற்காக...

✳ பேசாமலிருந்து கலைச்செல்வி என்ற சகோதரியின் 4 வயது மகன் 6 மணி நேர உபவாச ஜெபத்தில் ஜெபித்ததின் மூலம் அம்மா என்று பேசியதற்காக....

✳ ஆனந்தி என்ற சகோதரிக்கு வயிற்றில் காணப்பட்ட கட்டி ஜெபத்தின மூலம் நல்லமுறையில் அறுவை சிகிச்சை செய்யப் பட்டதற்காக....

### ஜெபிக்க



◈ புதிதாக ஆலயத்திற்கு வரும் சாரதா என்ற சகோதரியின் குடும்பம் இரட்சிக்கப்படும் படியாக....

◈ குமாரி என்ற சகோதரி பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்தார். 2 மாதம் ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது பூரண சுகம் கிடைத்ததற்காக....

◈ புதிதாக சுவிசேஷம் கேட்டவர்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படியாக....

**சகோ.R. சைமன் கண்ணன்**

## பெரும்பாலை,சாணார்பட்டி

### துதிக்க



✳ பல வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வந்த கலைவாணியின் குடும்பம் ஜெபத்தின் மூலம் ஒன்று சேர்ந்ததற்காக...

✳ சரோஜா என்ற சகோதரியின் கிட்னியில் உள்ள பிரச்சனை ஜெபத்தின் மூலம் மாறியதற்காக...

✳ பழனிசாமி என்ற சகோதரருக்கு ஜெபத்தின் மூலம் நுரையீரல் பாதிப்பிலிருந்து சுகம் கிடைத்ததற்காக...

### ஜெபிக்க



◈ சாணார்பட்டியில் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறவர்கள் மனந்திரும்பும் படியாக....

◈ திவ்யா என்ற சகோதரிக்கு காணப்படும் பைல்ஸ் பிரச்சனை விரைவில் மாறும்படியாக...

◈ சின்னராஜ் என்ற சகோதரரின் கால்களில் உள்ள வலி மற்றும் வீக்கம் விரைவில் குணமாகும் படியாக...

◈ பின்மாற்றமாய் போனவர்கள் அனைவரும் மீண்டும் சபைக்கு வரும்படியாக....

**சகோதரி.சுமித்ராதமிழ்வாணன்**

## வடகரை, குருபரஹள்ளி, பாலசமுத்திரம்

### துதிக்க

* கடன் பிரச்சனை தாங்கமுடியாமல் தற்கொலைக்கு முயற்சி செய்த சூரியாவை ஜெபத்தின் மூலம் தேவன் காப்பாற்றியதற்காக...
* பாலாஜிக்கு ஜெபத்தின் மூம் கர்த்தர் நீட் தேர்வில் வெற்றியை கர்த்தர் கொடுத்ததற்காக....

### ஜெபிக்க

- கலா என்ற சகோதரியின் முதுகு எலும்பு தேய்மானத்தினால் அறுவை சிகிச்சை செய்ய பணத் தேவைகள் சந்திக்கப்படும்படியாக....
- சின்னபாப்பா என்ற சகோதரியின் பேத்தி பவித்ரா இரத்த குறைவினால் கஷ்டப்படுகிறாள் விரைவில் சுகமாகும்படியாக....

## சகோதரர். சங்கர் சைமன்

## பாப்பிரெட்டிப்பட்டி

### துதிக்க

* வெள்ளையன் என்ற சகோதரருக்கு ஏற்பட்ட மாரடைப்பிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் கிடைத்ததற்காக....
* அலீஸ் என்ற சகோதரிக்கு காணப்பட்ட சுவாச பிரச்சனையிலிருந்து கர்த்தர் கொடுத்த நல்ல சுகத்திற்காக....
* இந்த மாதம் 4 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக...

### ஜெபிக்க

- ஆலயத்தை சுற்றியுள்ள மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படவும், எதிர்ப்புகள் மாறும்படியாகவும்...
- காஞ்சனா என்ற சகோதரி வீடு கட்டி முடிக்க அரசாங்கத்திலிருந்து வர வேண்டிய பணம் விரைவில் வரும்படியாக...
- ஸ்டீபன் சக்திவேல் என்ற சகோதரருக்கு விரைவில் திருமணம் எந்தவித தடையுமில்லாமல் சிறப்பாக நடைபெறும்படியாக....

## சகோதரர்.C. செல்வமணி

## கும்பாரஹள்ளி, கதிரிபுரம்

### துதிக்க

* ஆலயத்திற்கு வராமல் இருந்த அரவிந்த் என்ற சகோதரருக்காக ஜெபித்தபோது மீண்டும் சபைக்கு வந்ததற்காக....

### ஜெபிக்க

- பழனியம்மாள் என்ற சகோதரியின் கடன் பிரச்சனை மாறும்படியாக
- டேவிட் என்ற சகோதரருக்கு விரைவில் திருமணக்காரியத்தை

✳ கனேசன் என்ற சகோதரர் நெஞ்சு வலியினால் கஷ்டப்பட்டார். ஜெபத்தின் மூலம் கிடைத்த சுகத்திற்காக.....

கர்த்தர் ஏற்படுத்தி கொடுக்கும் படியாக...

◈ பூங்கொடி, முருகேசன், சின்னபாப்பா குடும்பத்தார் மனம்மாறி இயேசுவை ஏற்றுக்கொள்ளும் படியாக....

**சகோ. சாமுவேல் சரவணன்**

## காளிப்பேட்டை

### துதிக்க



✳ கிருஷ்ணன் என்ற சகோதரர் புதிதாக ஆலயத்திற்கு வந்ததற்காக....

✳ பிரித்திகா என்ற குழந்தை இரவில் தூங்காமல் மிகவும் அழுதுகொண்டு இருந்தது. ஜெபத்தின் மூலம் இரவில் நல்ல தூக்கத்தை கர்த்தர் கொடுத்ததற்காக....

✳ வீடு சந்திப்பு ஊழியத்தின் மூலமாக சுகன்யா என்ற சகோதரி புதிதாக ஆலயத்திற்கு வந்ததற்காக...

### ஜெபிக்க



◈ கோம்பூர் கிராமத்தில் விரைவில் இடம் வாங்கி ஆலயம் கட்டப்படும் படியாக....

◈ மஞ்சவாடி கிராமத்தை சேர்ந்த பிரபு என்ற சகோதரர் எந்தவித தடையும் இல்லாமல் ஆலயத்திற்கு வரும்படியாக....

◈ சுகன்யா, கார்த்திக் இவர்கள் குடும்பம் ஆலயத்திற்கு வரும்படியாகவும், இவர்களுடைய கடன் பிரச்சனை மாறும்படியாகவும்....

**சகோ.ஸ்டீபன் (எ) புரட்சிவீரன்**

## பெத்தூர்

### துதிக்க



✳ ஸ்டீபன் என்ற சகோதரர் கல்லூரி விரிவுரையாளர்களுக்கான தகுதித் தேர்வில் ஜெபத்தின் மூலம் வெற்றி பெற்றதற்காக...

✳ அம்சா என்ற சகோதரிக்கு செய்வினை கட்டிலிருந்து ஜெபத்தின் மூலம் கர்த்தர் கொடுத்த விடுதலைக்காக....

### ஜெபிக்க



◈ ஸ்டீபன் என்ற சகோதரருக்கு கல்லூரியில் வேலை நிரந்தரமாகும் படியாக...

◈ குறவர் காலனியில் சிறுவர் ஊழியம் ஆரம்பிக்க வாசல்கள் திறக்கப்படும் படியாக...

◈ அம்சா என்ற சகோதரியின் குடும்பம் இரட்சிக்கப்படும்படியாக....

**சகோ.R. கதிரேசன் ஸ்டீபன்**

### அரகாசனஅள்ளி

**துதிக்க**

* குடும்ப பிரச்சனையின் காரணமாக மிகுந்த மன உளைச்சலில் இருந்த கலைச்செல்விக்காக ஜெபித்தபோது தேவன் பிரச்சனையை நீக்கி சமாதானத்தை கொடுத்ததற்காக...
* பிரகதீஸ்வரன் என்ற சகோதரரின் குடிப்பழக்கத்தை ஜெபத்தின் மூலம் கர்த்தர் மாற்றியதற்காக...

**ஜெபிக்க**

- பாரதிபுரத்தில் சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நபர் மனம் திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ளும் படியாக...
- புதிதாக சுவிசேஷம் கேட்ட மக்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படியாக...

**சகோதரர்.V. பிலவேந்தர்**

### மூக்காரெட்டிப்பட்டி

**துதிக்க**

* உடல்நிலை பாதிக்கப்பட்டு எழுந்திருக்க முடியாமல் படுக்கையில் இருந்த நாகராஜ் என்ற சகோதரருக்கு ஜெபத்தின் மூலம் கிடைத்த பூரண சுகத்திற்காக....
* விடுமுறை வேதாகமப் பள்ளியின் மூலம் சந்திக்கப்பட்ட சிறுவர்களில் 5 சிறுவர்கள் ஆலயத்திற்கு வருகிறதற்காக...

**ஜெபிக்க**

- சுவிசேஷம் கேட்ட மக்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படியாக....
- ஜெபக்கூடுகையில் புதிதாய் கலந்துகொண்ட சிறுவர்கள் தொடர்ந்து வரும்படியாகவும், புதிதாய் சந்திக்கப்பட்டு வரும் சிறுவர்கள் இரட்சிக்கப்படும் படியாகவும்....

**சகோதரர். தனபால் மேத்யூ / சகோதரி.பவித்ரா மேத்யூ**

### அடிமலைபுதூர் பட்டுக்கோணம்பட்டி

**துதிக்க**

* 5 வருடங்களாக கோமாவில் இருந்த வேந்தன் என்ற சகோதரருக்கு ஜெபத்தின் மூலம் சிறிய முன்னேற்றம் வந்ததற்காக....

**ஜெபிக்க**

- ஞானஸ்நானம் எடுத்தும் பின்வாங்கியவர்கள் மீண்டும் ஆலயத்திற்கு வரும்படியாக....
- ஊழியரின் மனைவிக்கு காணப்படும் மார்பக புற்றுநோய் விரைவில் குணமாகும்படியாக....

* அடிமலைப்புதூரை சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலை கர்த்தர் தரும்படியாக...

◈ சமத்துவபுரம் பணித்தளத்தில் விரைவில் இடம் வாங்கி ஆலயம் கட்டப்படும்படியாக....

**சகோதரர்.தே. சாம் அன்புராஜ்**

## தாசர்குந்தி



### துதிக்க

* சத்தியா என்ற சகோதரியின் 10 வயது மகனுக்கு ஏற்பட்ட விபத்தில் பெரிய ஆபத்து இல்லாமல் தேவன் பாதுகாத்ததற்காக...

* கவிதா என்ற வாலிப சகோதரிக்கு பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் கிடைத்த விடுதலைக்காக....

### ஜெபிக்க



◈ புதிதாய் சுவிசேஷம் கேட்டவர்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படியாக...

◈ விசுவாசிகள் அனைவரும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்குமபடியாக.....

**சகோதரர். D.N. அற்புதராஜ்**

## சிடுவம்பட்டி



### துதிக்க

* மித்ரா என்ற சகோதரியின் குழந்தை இரவு நேரத்தில் பயந்து அழுதுகொண்டேயிருந்தது. ஜெபத்தின் மூலம் நன்றாக தூங்க கர்த்தர் கிருபை செய்ததற்காக....

* ஏரியூர் பகுதியில் உள்ள அண்ணாநகரில் புதிதாக ஜெபக்குழு ஆரம்பிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

* இந்த மாதம் 5 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

### ஜெபிக்க



◈ தேன்மொழி கேசவன் இவர்கள் குடும்பத்தில் காணப்படும் நிலத்தகறாறு நீங்கவும், குடும்பத்தில் சமாதானத்தை தேவன் கொடுக்கும்படியாகவும்....

◈ ஊழியருக்கு ஊழியம் செய்ய இருசக்கர வாகனம் கிடைக்கும் படியாக...

◈ ஆண்டவரை அறிந்து பின்வாங்கிபோன சிடுவம்பட்டி மக்கள் மீண்டும் ஆலயத்திற்கு வரும்படியாக....

**சகோ.C.J. தேவாச்சாரியா**

## புதுக்கோட்டை சரகு

### துதிக்க

✳ பிரபு, சத்தியா, ஜோதி, மகாலெட்சுமி இவர்கள் புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்டு ஆலயத்திற்கு வருகிறதற்காக....

✳ மனோகரன் என்ற சகோதரரின் சரீரத்தில் காணப்பட்ட வீக்கம், சரீர சோர்வு ஜெபத்தின் மூலம் சுகமானதற்காக...

### ஜெபிக்க

◈ ரேனு பிரகாஷ் என்ற சகோதரரின் குடிப்பழக்கத்தை தேவன் விரைவில் மாற்றும்படியாக...

◈ ஆலயத்திற்கு வரும் சிறுவர்கள், வாலிபர்களை அவர்களுடைய பெற்றோர் தடைசெய்கிறார்கள். எந்தவித தடையுமில்லாமல் ஆலயத்திற்கு வரும்படியாக....

**சகோதரர்.A. ஜாண்பீட்டர்**

## சிந்தல்பாடி, சி. பள்ளிபட்டி

### துதிக்க

✳ ஆதிமூலம் மற்றும் அவரது மனைவி சரீரத்தில் காணப்பட்ட பெலவீனங்கள் ஜெபத்தின் மூலம் மாறியதற்காக....

✳ சரசு என்ற சகோதரியின் மகனுக்கு ஜெபத்தின் மூலம் திருமணக் காரியத்தை கர்த்தர் ஏற்படுத்தி கொடுத்ததற்காக....

✳ இந்த மாதம் 3 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

### ஜெபிக்க

◈ மாரியம்மாள் என்ற சகோதரியின் சரீரத்தில் காணப்படும் பெலவீனங்களை தேவன் மாற்றி நல்ல சரீர சுகத்தை தரும்படியாக...

◈ அம்மு என்ற சகோதரி விரைவில் வீடு கட்டும்படியாகவும், தேவைகள் சந்திக்கப்படும்படியாகவும்....

◈ ஜெயந்தி என்ற சகோதரியின் கடன் பிரச்சனைகளை தேவன் விரைவில் மாற்றும்படியாக....

**சகோதரர்.S. குமார்**

## வடகரை

### துதிக்க

✳ பாலாஜிக்கு நீட் தேர்வில் ஜெபத்தின் மூலம் கர்த்தர் கொடுத்த வெற்றிக்காக....

✳ விஸ்வநாதன் என்ற சகோதரருக்கு ஏற்பட்ட விபத்தில் எந்தவித சேதமும்

### ஜெபிக்க

◈ பின்மாற்றத்தில் இருக்கும் மக்கள் அனைவரும் மீண்டும் ஆலயத்திற்கு வரும்படியாக....

◈ லலிதா என்ற சகோதரியின் கணவர் மற்றும் பிள்ளைகள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாகவும்

இல்லாமல் கர்த்தர் ஜீவனை பாதுகாத்ததற்காக...

✳ ஊழியரின் மனைவிக்கு ஜெபத்தின் மூலம் கர்த்தர் கொடுத்த குழந்தைக்காக...

குடும்பத்தில் சமாதானம் கிடைக்கும் படியாகவும்...

◈ மதுபானத்திற்கு அடிமையாயிருக்கும் எங்கள் பகுதியிலுள்ள வாலிபர்கள் மனந்திரும்பும்படியாக....

**சகோதரர்.L. ரகுநாத்**

## கிருஷ்ணகிரி மாவட்டம்: போச்சம்பள்ளி,வடமலப்பட்டி

### துதிக்க

✳ எஸ்தர் என்ற சகோதரிக்கு இரத்தக் கொதிப்பு அதிகமாகி கை,கால் வீக்கமாகி கஷ்டப்பட்டார். ஜெபத்தின் மூலம் சுகமானதற்காக...

✳ கௌரி என்ற சகோதரி நான்கு மாதங்களாக சரீர ஊறலினால் கஷ்டப்பட்டார். ஜெபத்தின் மூலம் கிடைத்த சுகத்திற்காக....

### ஜெபிக்க

◈ வளர்மதி என்ற சகோதரிக்கு விரைவில் குழந்தை பாக்கியத்தை கர்த்தர் கொடுக்கும்படியாக.....

◈ சங்கீதா என்ற சகோதரியின் கடன் பிரச்சனை மாறவும், வேலை நிரந்தரமாக்கப்படும்படியாகவும்....

◈ பவித்ரா எழுதும் தேர்வில் கர்த்தர் நல்ல வெற்றியை கொடுக்கும் படியாக.....

**சகோ. S. எசேக்கியேல்ராஜா**

## கேரட்டி, ஒசட்டி

### துதிக்க

✳ மச்சம்மா, சயித்தா, லோகேஷ் இவர்களுக்கு ஜெபத்தின் மூலம் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து கர்த்தர் கொடுத்த விடுதலைக்காக....

✳ இந்தமாதம் ஆலயத்திற்கு வரும் 2 புதிய குடும்பத்திற்காகவும், அவர்களுக்கு தேவன் செய்த நன்மைக்காகவும்....

### ஜெபிக்க

◈ மச்சம்மா-சீனிவாசன் இவர்கள் குடும்பத்தில் உள்ள கடன் பிரச்சனைகள் மாறும்படியாக....

◈ திம்மராயப்பா என்ற சகோதரர் பக்கவாதத்தினால் இடது கை, கால் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார். விரைவில் சுகம் கிடைக்கும்படியாக....

**சகோ. G. பூபதி**

## சின்னார்

### துதிக்க

✳ இடுப்பு முறிவு காரணமாக படுத்த படுக்கையாக இருந்த வெங்கடேஷ் என்ற சகோதரர் ஜெபத்தின் மூலம் சிறிது நடக்க ஆரம்பித்த தற்காக...

✳ இந்த மாதம் 3 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

### ஜெபிக்க

◈ சின்னார் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் ஊழியத்திற்கு காணப்படும் எதிர்ப்புகளை தேவன் மாற்றும் படியாக....

◈ புதிதாக சுவிசேஷம் கேட்டவர்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படியாக....

**சகோ.P. தர்மன்**

## கரியசந்திரம்

### துதிக்க

✳ நாராயணன் என்ற சகோதரரின் மகனுக்கு காணப்பட்ட உடல் ரீதியான பிரச்சனை குடும்பமாக ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது நல்ல சுகம் கிடைத்ததற்காக....

✳ ஜெகல்ராணி அவர்களுக்கு வரவேண்டிய பணம் ஜெபத்தின் மூலம் வந்து சேர்ந்ததற்காக....

### ஜெபிக்க

◈ மகேஷ்பாபு என்ற சகோதரர் கடுமையான தலைவலியினால் கஷ்டப்படுகிறார். விரைவில் சுகம் கிடைக்கும்படியாக....

◈ அனிதா என்ற சகோதரியின் குடும்பத்தில் உள்ள பிரச்சனைகளை தேவன் விரைவில் மாற்றும் படியாக....

**சகோ. ஜாண் வெங்கடேஷ்**

## சவுளூர்

### துதிக்க

✳ செந்தில்குமார் என்ற சகோதரர் வீடு கட்டுவதற்கு உள்ள தடைகளை தேவன் மாற்றியதற்காக....

✳ ஜூலியம்மா என்ற சகோதரி அடிக்கடி கீழே விழுந்தும் எந்த சேதமும் இல்லாமல் தேவன் பாதுகாத்த தற்காக....

### ஜெபிக்க

◈ தனிகாசலம் அவர்கள் சரீரத்தில் நல்ல சுகம் பெற்று குடும்பமாக ஆலயத்திற்கு வரும்படியாகவும், மகன் திருமணத்திற்காகவும்....

◈ சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் ஊழியம் சிறப்பாக நடைபெறவும், தடைகள் மாறும்படியாகவும்....

**சகோ.K. வேதசெல்வம்**

### சூளகிரி

**துதிக்க**

✳ ஜாய்ஸ் என்ற சகோதரி ஜெபத்தின் மூலம் சொந்த இடம் வாங்க தேவன் கிருபை செய்ததற்காக....

✳ தேவதாஸ் என்ற சகோதரரின் மகள் ஜெபத்தின் மூலம் 10-ம் வகுப்பு தேர்வில் பள்ளியில் முதல் மாணவியாகதேர்ச்சிபெற்றதற்காக...

**ஜெபிக்க**

◈ பிரவீனா, இந்திராணி என்ற சகோதரிகளுக்கு கர்த்தர் சுகப்பிரசவத்தை கொடுக்கும் படியாக...

◈ இந்த மாதம் புதிதாக சுவிசேஷம் கேட்ட மக்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்படியாக.....

**சகோதரர்.R. ஏனோஸ் ஆர்தர்**

### சென்னூர்,கோடாலிவலசை

**துதிக்க**

✳ ஒரு வருடமாக சுவிசேஷம் கேட்டும் இயேசுவை ஏற்றுக்கொள்ளாத முனியப்பன், வளர்மதி இவர்கள் ஜெபத்தின் மூலம் இப்போது ஜெபக்கூடுகையில் கலந்துகொள்கிறதற்காக....

✳ கோடாலிவலசை, நாகராசன்பட்டி என்ற புதிய கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

**ஜெபிக்க**

◈ நாகராசன்பட்டி கிராமத்தில் விரைவில் நிலம் வாங்கி ஆலயம் கட்டப்படும்படியாக....

◈ சென்னூர் ஆலயத்தை சுற்றிலும் சுற்று சுவர் விரைவில் கட்டப்படும்படியாக....

◈ புதிதாக சுவிசேஷம் கேட்டவர்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படியாக.....

**சகோதரர்.T. சந்திரநாயக்**

### திருப்பத்தூர் மாவட்டம்: பனந்தோப்பு

**துதிக்க**

✳ குடும்பத்தில் சமாதானமில்லாமல் இருந்த இந்திராணி என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் கிடைத்த சமாதானத்திற்காக...

✳ பூமணி என்ற சகோதரி கடன் பிரச்சனையினால் கஷ்டப்பட்டார்.

**ஜெபிக்க**

◈ செல்வகுமார், சுகதேவன், பிரகாஷ், முனியப்பன், சக்திவேல், ராஜிவ்காந்தி, மணிவண்ணன், இளையராஜவீரன், வாதாடி, சக்திவேல் இவர்கள் அனைவரும் ஆலயத்திற்கு வரும்படியாக....

◈ பழனி என்ற சகோதரரின் குடிப்பழக்கத்தை கர்த்தர் மாற்றவும்,

ஜெபத்தின் மூலம் கடன் பிரச்சனையை கர்த்தர் மாற்றியதற்காக....

✳ இந்த மாதம் புதிதாக 7 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

அவர் ஆலயத்திற்கு வரும் படியாகவும்...

◈ கவியரசி என்ற சகோதரிக்கு காணப்படும் வயிற்று வலி, மற்றும் பிசாசின் பிடியிலிருந்தும் விடுதலை கிடைக்கும்படியாக.....

**சகோதரர்.K. தாமஸ்**

## ஜம்மணபுதூர்



### துதிக்க

✳ ஆராதனை நடத்துவதற்கு உள்ள தடைகளை தேவன் மாற்றி நான்கு குடும்பங்கள் ஆராதனையில் கலந்துகொண்டதற்காக....

✳ ஷர்லினா, அனிஷ் சிறுவர்களுக்கு ஆப்ரேஷன் நல்ல முறையில் செய்யப்பட்டதற்காக....

✳ இந்த மாதம் 10 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

### ஜெபிக்க



◈ புதூர் பூங்குளம் பணித்தளத்தில் ஊழியத்திற்கு காணப்படும் எதிர்ப்புகளை தேவன் மாற்றும் படியாக.....

◈ திம்மணமூத்தூர், ஆத்துமேடு, தம்மனூர், புலிகுத்திவட்டம், துளசீயூர், ஜம்மணபுதூர் எக்ஸ் ரோடு கிராம மக்கள் இரட்சிக்கப்படும் படியாக....

**சகோதரர்.E. ஜாண் ஜெயமணி**

## விஷமங்களம், சென்னூர்

### துதிக்க



✳ கிருஷ்ணாபுரம் என்ற புதிய கிராமத்தை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக...

✳ ஊழியத்திற்கு உதவியாயிருக்கும் கிருஷ்ணன், கலைவாணன் குடும்பங்களுக்காக....

✳ ஆண்டியூர், மங்களப்பள்ளி கிராமங்களில் சிறுவர் வேதாகம வகுப்புகள் நடத்த தேவன் கிருபை செய்ததற்காக...

### ஜெபிக்க



◈ கிரிதரன், கலைவணன், பாலன், கிருஷ்ணமூர்த்தி, கோமதி, ராமுநஜன், ஜெனனி, அண்ணாமலை இவர்கள் அனைவரும் இரட்சிக்கப்படும் படியாக....

◈ கலைவாணன் என்ற 32 வயது சகோதரனுக்கு விரைவில் திருமணக் காரியத்தை கர்த்தர் ஏற்படுத்தி கொடுக்கும்படியாக....

**சகோதரர்.P. பால்ராஜ்**

## கோவிந்தாபுரம்

### துதிக்க

✳ மகேஷ்வரி பாப்பா அவர்களின் மகனுக்கு ஜெபத்தின் மூலம் கல்லூரியில் படிக்க இடம் கிடைத்ததற்காக....

✳ மேரி என்ற சகோதரியின் குடும்பத்தில் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் காய்ச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஜெபத்தின் மூலம் கிடைத்த சுகத்திற்காக.....

### ஜெபிக்க

◈ மேரி என்ற சகோதரியின் மகன் மற்றும் மருமகள் ஆலயத்திற்கு வரும்படியாக....

◈ நகோமி என்ற சகோதரி விரைவில் சொந்த வீடு வாங்கும் படியாகவும், இவருடைய கணவர் மனந்திரும்பும்படியாகவும்....

◈ மகேஷ்வரி பாப்பா குடும்பத்தில் உள்ள பிரச்சனைகளை தேவன் மாற்றி சமாதானத்தை தேவன் கொடுக்கும்படியாக......

**சகோதரர்.D. அன்பழகன்**

## பொம்மிகுப்பம்

### துதிக்க

✳ உண்ணாமலை என்ற சகோதரியின் கணவருடைய குடிப்பழக்கம் ஜெபத்தின் மூலம் மாறியதற்காக....

✳ பூங்கோதை என்ற சகோதரிக்கு பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் கிடைத்த விடுதலைக்காக...

✳ ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாயிருக்கும் சண்முகம், வீரமணி, நிவேதித்தா, கவுசல்யா, லதா இவர்களுக்காக...

### ஜெபிக்க

◈ நிவேதித்தாவுக்கு இயேவை ஏற்றுக்கொண்ட ஒரு கணவர் கிடைக்கும்படியாக....

◈ தீபா என்ற சகோதரிக்கு வேலை செய்கிற இடத்தில் காணப்படும் எதிர்ப்புகளை தேவன் மாற்றும் படியாக.....

◈ ஊழியரின் மனைவிக்கு சரீரத்தில் காணப்படும் பெலவீனங்களை தேவன் மாற்றி நல்ல சுகம் பெலனை கொடுக்கும்படியாக....

**சகோதரர்.D. பாஸ்கர் ரெஃபிங்**

## திரியாலம், கல்லாறு

### துதிக்க

✳ செல்வி என்ற சகோதரியின் கடன் பிரச்சனை ஜெபத்தின் மூலம் மாறியதற்காக....

### ஜெபிக்க

◈ ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாயிருக்கும் வீரராகவன், அஞ்சலி, பத்மாவதி இவர்கள் எந்தவித தடையுமில்லாமல்

✳ கட்டப்படாமல் இருந்த ஜெஸ்லின் என்ற சகோதரியின் வீடு ஜெபத்தின் மூலம் கட்டப்பட்டதற்காக....

✳ ஆலயத்திற்கு வரமுடியாமல் அதிக பெலவீனத்தோடு காணப்பட்ட ஜெயா என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் கிடைத்த சுகத்திற்காக...

ஞானஸ்நானம் எடுக்கும்படியாக....

◈ செய்வினை கட்டினால் பாதிக்கப் பட்டுள்ள சுந்தரம் அவர்கள் குடும்பத்தில் காணப்படும் பிரச்சனைகள், சண்டைகள் எல்லாம் மாறும்படியாக....

**சகோ.M. ராபின்**

## தோரணம்பதி

### துதிக்க



✳ புதிய கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக...

✳ சூனியத்தினாலும், மரணபயத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜெபத்தின் மூலம் கர்த்தர் கொடுத்த நல்ல விடுதலைக்காக....

### ஜெபிக்க



◈ ஊழியரின் மனைவிக்கு கர்த்தர் சுகப்பிரசவத்தை கர்த்தர் கொடுக்கும்படியாக....

◈ புதிதாய் சுவிசேஷம் கேட்டவர்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படியாக....

**சகோ.P. முனாசாமி**

## கள்ளக்குறிச்சி மாவட்டம்: மரூர்/சின்னக்கொள்ளியூர்

### துதிக்க



✳ பச்சையம்மாள் என்ற சகோதரி ஆலயத்திற்கு கூட வரமுடியாதபடி அதிகமா காய்ச்சலினால் கஷ்டப்பட்டார் ஜெபத்தின் மூலம் கர்த்தர் கொடுத்த சுகத்திற்காக...

✳ கண்மனி என்ற சகோதரிக்கு ஆப்ரேஷன் பண்ணின இடத்தில் உள்ள காயங்கள் விரைவில் ஆறும்படியாக....

### ஜெபிக்க



◈ செந்தில்குமார் இவர்கள் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஆலயத்திற்கு வரும்படியாக.....

◈ ஊழியத்திற்கு இருசக்கர வாகனம் விரைவில் கிடைக்கும்படியாக....

◈ குமாரி என்ற சகோதரிக்கு பயத்தின் பிடியிலிருந்து விடுதலை கொடுக்கும்படியாக....

**சகோ.A. ஜெயபிரகாசம்**

## திருவண்ணாமலை மாவட்டம் தாமரைநகர்

### துதிக்க

✳ காவேரிமுண்டி எனற புதிய கிராமத்தை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

✳ துர்கா ஆல்வின் குடும்பத்தினருக்கு ஜெபத்தின் மூலம் கர்த்தர் குழந்தை பாக்கியத்தை கொடுத்ததற்காக....

### ஜெபிக்க

◈ செல்வரோஸ் என்ற சகோதரிக்கு பணி இடமாறுதல் கிடைக்கும் படியாக....

◈ அருள் சுரேஷ் என்ற சகோதரருக்கு கண் அறுவை சிகிச்சை விரைவில் செய்யவும் தொழிலில் முன்னேற்றம் கிடைக்கும் படியாகவும்....

**சகோதரர்.Y. ஞானராஜ்**

## மாடம்பூண்டி

### துதிக்க

✳ உதிரபோக்கினால் கஷ்டப்பட்ட ஆசினி என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் நல்ல சுகம் கிடைத்ததற்காக....

✳ பன்னீர் என்ற சகோதரருக்கு ஏற்பட்ட விபத்தினால் காணப்பட்ட காயங்களை தேவன் சுகமாக்கிய தற்காக...

### ஜெபிக்க

◈ குடி மற்றும் போதை பழக்கத்திற்கு அடிமையாயிருக்கும் நரிக்குறப் பெண்கள் மனந்திரும்பும்படியாக...

◈ ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட மக்கள் தொடர்ந்து ஆலயத்திற்கு வரும்படியாக....

◈ புதிதாக சுவிசேஷம் கேட்டவர்கள் அனைவரும் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியாக....

**சகோ.I. வேங்கையன்**

## சங்கராபுரம்

### துதிக்க

✳ சலோஜி என்ற சகோதரி வயிற்றில் நீர்கட்டியினால் கஷ்டப்பட்டார். ஜெபத்தின் மூலம் கர்த்தர் சுகமாக்கியதற்காக....

### ஜெபிக்க

◈ பழனி என்ற சகோதரரின் குடிப்பழக்கத்தை கர்த்தர் விரைவில் மாற்றும்படியாக....

◈ சத்தியராஜ் என்ற சகோதரரின் 8 லட்சம் கடன் பிரச்சனையை தேவன் விரைவில் மாற்றும்படியாக...

* 3 வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்த திரிஷா என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் குழந்தை பாக்கியத்தை கர்த்தர் கொடுத்ததற்காக...

◈ மீனா என்ற சகோதரிக்கு ஆலயத்திற்கு வருகிறதற்கு உள்ள தடைகளை தேவன் மாற்றும்படியாக....

**சகோதரர்.S. ஆனந்தராஜ்**

## கனந்தம்பூண்டி



### துதிக்க

* சரீரத்தில் சுகவீனத்தோடு காணப்பட்ட சாந்தி என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் கிடைத்த சுகத்திற்காக....
* இந்த மாதம் 5 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

### ஜெபிக்க



◈ புதிதாக சுவிசேஷம் கேட்ட மக்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படியாக....

◈ எங்கள் பகுதியில் உள்ள நரிக்குறவர்கள் அனைவரும் அனைவரும் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ளும் படியாக....

**சகோதரர்.P. ஜெயபால்**

## சேலம் மாவட்டம்: பூசாரிப்பட்டி



### துதிக்க

* சிவா என்ற சகோதரர் ஜெபத்தின் மூலம் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொண்டதற்காக...
* காமராஜர் என்ற சகோதரர் காலில் காணப்பட்ட புண் ஜெபத்தின் மூலம் சுகமானதற்காக...
* கமலி என்ற சகோதரியின் கிட்னி பிரச்சனையை ஜெபத்தின் மூலம் தேவன் மாற்றியதற்காக...

### ஜெபிக்க



◈ எதிர்ப்பு தெரிவிக்கும் வாலிபர்கள் மனந்திரும்பும்படியாக....

◈ சிவா என்ற சகோதரரின் குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்பட்டு இயேசுவை ஏற்றுக்கொள்ளும் படியாக....

◈ அப்பாவை இழந்து தவிக்கும் காவியாவின் குடும்பத்தில் தேவன் ஆறுதலையும், சமாதானத்தையும் கொடுக்கும்படியாக.....

**Rev.P. எபனேசர்**

## ஓலப்பாடி



### துதிக்க

- ✳ கடந்த மாதம் ஊழியருக்கு ஏற்பட்ட விபத்தில் உயிருக்கு எந்த ஆபத்துமில்லாமல் கர்த்தர் ஜீவனை பாதுகாத்ததற்காக...
- ✳ தெய்வாணை என்ற சகோதரிக்கு சரீரத்தில் காணப்பட்ட பெலவீனங்களை ஜெபத்தின் மூலம் கர்த்தர் மாற்றியதற்காக....
- ✳ ஊழியரின் மாமனாருக்கு ஏற்பட்ட மாரடைப்பு வியாதி ஜெபத்தின் மூலம சுகமானதற்காக.....

### ஜெபிக்க



- ◈ பெரியம்மா என்ற சகோதரிக்கு பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலை கிடைக்கும்படியாக...
- ◈ தனலட்சுமி என்ற சகோதரியின் மகனுக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களை கர்த்தர் விரைவில் மாற்றும்படியாக....
- ◈ சிவபெருமாளுக்கு உள்ள இழுப்பு வியாதி குணமாகும்படியாக....
- ◈ ஓலப்பாடி ஆலயத்திற்கு விரோதமாய் எழும்பும் மனதர்களன் தந்திரம்-சூழ்ச்சி, போராட்டத்திலிருந்து விடுதலை கிடைக்கும்படியாக...

**சகோதரர்.V. ராஜேஷ்**

## விழுப்புரம் மாவட்டம் கொள்ளுமேடு



### துதிக்க

- ✳ சாம்கஜபதி என்ற சகோதரர் குடும்பத்தில் 6 மாதங்களாக காணப்பட்ட போராட்டங்கள் ஜெபத்தின் மூலம் மாறியதற்காகவும், குடும்பமாக ஆலயத்திற்கு வருகிறதற்காக.....
- ✳ மரக்காணம் காலனி, குரும்பரம், ஆலத்தூர் ஆகிய புதிய கிராமங்களை சந்தித்து சுவிசேஷம்சாம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

### ஜெபிக்க



- ◈ அமாவாசை, மணிமேகலை, சீனிவாசன்-ரேகா,முருன்-வினோஸ்ரீ, கனிமொழி, பாக்கியலட்சுமி ஆகியோரது வீடு கட்டுவதற்கு உள்ள தடைகளை தேவன் மாற்றி வீடு கட்டி முடிக்கப்படும்படியாக....
- ◈ பால்லூர்துநாதன் என்ற சகோதரரின் சரீர சுகத்திற்காகவும், மனைவிக்கு கிட்னி பிரச்சனையிலிருந்து சுகம் கிடைக்கும்படியாகவும்....
- ◈ சூர்யா என்ற சகோதரியின் கணவருடைய குடிப்பழக்கத்தை கர்த்தர் மாற்றும்படியாக....

**சகோதரர்.D. மோசஸ் அந்தோணி சேவியர்**

# பணித்தள தேவைகள்

## தருமபுரி மாவட்டம்:

### புதுக்கோட்டை சரடு பணித்தளம்:

1. ஆலய வளாகத்தில் மிஷனெரிக்கு வீடு கட்டப்பட வேண்டும்.
2. நிரந்தரமாக மின் இணைப்பு கிடைக்க வேண்டும்.
3. தண்ணீர் வசதி கிடைக்க வேண்டும்

### அடிமலைப்புதூர் - பட்டுக்கோணம்பட்டி பணித்தளம்:

1. பணித்தளத்தில் ஞானஸ்நான தொட்டி தேவைப்படுகிறது.
2. ஆலயத்திற்குள் Fall Ceiling அமைக்க வேண்டும்.
3. ஆலயத்தை சுற்றிலும் காம்பவுண்டு சுவர் அமைக்க வேண்டும்.
4. புதிதாக 2 ஸ்பீக்கர் தேவைப்படுகிறது.
5. ஆலயத்திற்கு 30 சேர்கள் தேவைப்படுகிறது.

### சிந்தல்பாடி:

1. மிஷனெரி வீடு மேல்தளம் போட வேண்டும்.
2. ஆலயத்திற்கு LED சிலுவை தேவைப்படுகிறது.
3. ஆலயத்திற்கு கீ போர்டு ஒன்று தேவைப்படுகிறது.
4. 50 சேர்கள் தேவைப்படுகிறது.

### அரகாசனஹள்ளி பணித்தளம்:

1. மிஷனெரிக்கு இருசக்கர வாகனம் தேவைப்படுகிறது.

### பெத்தூர் பணித்தளம்:

1. ஆலயத்திற்கு குடிநீர் இணைப்பு பெற வேண்டும்.
2. மிஷனெரி இல்லத்தில் புதிய மின் இணைப்பு வாங்க வேண்டும்.
3. ஆலயத்திற்கு போர் போட வேண்டும்.
4. ஆலயத்தின் கோப்புகளை பாதுகாக்க ஒரு பீரோ தேவைப்படுகிறது.

### மூக்காரெட்டிப்பட்டி பணித்தளம்:

1. ஆம்ப் மற்றும் ஸ்பீக்கர் தேவைப்படுகிறது.
2. மிஷனெரி வீடு சரிபார்க்கப்பட வேண்டும்.
3. ஆலயத்தின் நுழைவாயில் பெரியதாக கட்ட வேண்டும்.

### வெங்கடசமுத்திரம் பணித்தளம்:

1. ஆலயத்தின் பின்புறம் காம்பவுண்டு சுவர் அமைக்க வேண்டும்.
2. மிஷனெரி வீட்டின் கழிவறை புதுப்பிக்கப் பட வேண்டும்.

**காளிப்பேட்டை பணித்தளம்:**

1. திருச்சபை மற்றும் மிஷனெரி வீடு மேல்தளம் சிமெண்ட் கான்கிரீட் அமைக்க வேண்டும்.
2. ஆலயத்தை சுற்றிலும் சுற்று சுவர் கட்டப்பட வேண்டும்.
3. தண்ணீர் பற்றாக்குறை இருப்பதால் இன்னும் ஆழமாக போர் போட வேண்டும்.

**பாப்பிரெட்டிப்பட்டி பணித்தளம்:**

1. மிஷனெரி வீடு கான்கிரீட் போடவேண்டும்.

**வடகரை பணித்தளம்:**

1. ஆலயம் தரை தளம் டைல்ஸ் போட வேண்டும்.
2. LED Light தேவைப்படுகிறது.
3. ஒரு கொட்டு தேவைப்படுகிறது.

**குருபரஹள்ளி, பாலசமுத்திரம் பணித்தளம்:**

1. பாத்ரூம கட்ட வேண்டும்.
2. கீ போர்டு ஒன்று தேவைப்படுகிறது.
3. ஆல்டர் மேஜை துணி ஒன்று தேவைப்படுகிறது.

**சாணார்பட்டி - சோழிக்கவுண்டனூர் பணித்தளம்:**

1. ஆலயத்தை சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட வேண்டும்.

**சிடுவம்பட்டி பணித்தளம்:**

1. ஆல்டரில் தடுப்பு சங்கிலி அமைக்க வேண்டும்.
2. பிரசங்க மேடை அமைக்க வேண்டும்.
3. கொட்டு அல்லது பாம்பின் தேவைப்படுகிறது.
4. நாற்காலிகள் தேவைப்படுகிறது.
5. ஆலயத்தின் மேற்கூரை பழுது பார்க்கப்பட வேண்டும்.
6. ஆழ்துளை கிணறு போட வேண்டும்.

**கிருஷ்ணகிரி மாவட்டம்:**

**வடமலம்பட்டி - போச்சம்பள்ளி பணித்தளம்:**

1. ஆலயத்தை சுற்றி சுவர் பூசப்பட வேண்டும்.

**சின்னார் பணித்தளம்:**

1. இரவில் ஆராதனை நடத்துவதற்கு பேட்ரி, டார்ச் தேவைப்படுகிறது.
2. ஸ்ட்ரேன்ஜர் தேவைப்படுகிறது.
3. மூன்று தார்பாய்கள் தேவைப்படுகிறது.

**கரியசந்திரம் பணித்தளம்:**

1. 10 சேர்கள் தேவைப்படுகிறது.
2. பிரசங்க மேடை, பீடம் தேவைப்படுகிறது.

3. Sound System தேவைப்படுகிறது.

**சவுளூர் பணித்தளம்:**

1. ஆலயம் மற்றும் மிஷனெரி வீட்டிற்கு சர்வீஸ் வயர் மாற்ற வேண்டும்.
2. கழிப்பறை பழுது பார்க்கப்பட வேண்டும்.
3. போர்வெல் போட தேவைகள் சந்திக்கப்பட வேண்டும்.

**திருப்பத்தூர் மாவட்டம்:**

**பனந்தோப்பு பணித்தளம் - பிரசன்ன ஆலயம்**

1. ஆலயத்திற்கு அருகில் மிஷனெரி வீடு கட்டப்படவேண்டும்.
2. ஆலயத்தின் பலிபீடம் பழுது பார்க்கப்பட வேண்டும்.
3. பிரசங்க பீடம் அமைக்கப்பட வேண்டும்.
4. 20 சேர்கள் தேவைப்படுகிறது.
5. மிஷனெரிக்கு ஊழியத்திற்கு இருசக்கர வாகனம் தேவைப்படுகிறது.
6. விடுதலை கீதங்கள் பாட்டு புத்தகம் 25 தேவைப்படுகிறது.
7. ஆலயத்திற்கு புல்பிட் மற்றும் கீ போர்டு தேவைப்படுகிறது.

**விசமங்கலம் - சென்னூர் பணித்தளங்கள்:**

1. அகுஜா ஆம்லிபயர் 250 வாட்ஸ் ஒன்று தேவைப்படுகிறது.
2. அகுஜா ஸ்பீக்கர் பாக்ஸ் ஒன்று தேவைப்படுகிறது.
3. கீ போர்டு ஒன்று தேவைப்படுகிறது.
4. சேர் 20 தேவைப்படுகிறது.
5. அகுஜா மைக் 2 தேவைப்படுகிறது.
6. கீதங்களும் கீர்த்தனைகளும் பாடல் புத்தகம் 40 தேவைப்படுகிறது.

**ஜம்மணபுதூர் - புதூர் பூங்குளம் பணித்தளங்கள்:**

1. மிஷனெரிக்கு ஊழியம் செய்ய இருசக்கர வாகனம் தேவைப்படுகிறது.
2. மிஷனெரி இல்லம் புதுப்பிக்கப்பட வேண்டும். கழிவறை கட்ட வேண்டும்.
3. தண்ணீர் வசதிக்கு போர் போட வேண்டும்.
4. இரண்டு தையல் மிஷின், இரண்டு கம்ப்யூட்டர் தேவைப்படுகிறது.
5. ஆல்டர் டேபிள் துணி தேவைப்படுகிறது.
6. கீ போர்டு, மெகாபோன் தேவைப்படுகிறது.

**தோரணம்பதி பணித்தளம்:**

1. ஆலயத்தின் அருகில் மிஷனெரி வீடு கட்டப்பட வேண்டும்.

**திரியாலம், கல்லாறு பணித்தளம்:**

1. ஆலயத்தின் மேல்தரை பூசப்படாத நிலையில் உள்ளது. அதை சரிசெய்ய வேண்டும்.

**கோவிந்தாபுரம் பணித்தளம்:**

1. போர்வெல் தேவைப்படுகிறது.

2. ஆலயத்தை சுற்றி காம்பவுண்டு வேலி மற்றும் கேட் போடவேண்டும்.
3. ஆலயக் கட்டிடத்திற்கு பெயிண்ட் அடிக்க வேண்டும்.
4. இரண்டு மைக் தேவைப்படுகிறது.

**பொம்மிக்குப்பம் பணித்தளம்:**

1. ஆலயத்திற்கு வசன கடிகாரம் தேவை.
2. ஆலயத்தை சுற்றிலும் சுற்று சுவர் கட்டப்பட வேண்டும்.
3. போர்வெல் போட வேண்டும்.
4. ஆல்டர் துணி தேவைப்படுகிறது.
5. கழிப்பறை மற்றும் பாத்ரூம் தேவைப்படுகிறது.
6. ஆலயத்திற்கு டோலக் தேவை.

**சேலம் மாவட்டம்:**

**ஓலப்பாடி பணித்தளம்:**

1. ஆலயத்திற்கு 20 சேர்கள் தேவைப்படுகிறது.
2. பாடல் புத்தகம் 20 மற்றும் காணிக்கைப் பை ஒன்றும் தேவைப்படுகிறது.
3. மேஜை ஒன்று தேவைப்படுகிறது.
4. வேதாகமம் 3 தேவைப்படுகிறது.
5. ஸ்ட்ரேஞ்சர் பாக்ஸ், சிறிய டிரம் தேவைப்படுகிறது.
6. புதிய ஏற்பாடு பெட்டிகள், துண்டு பிரதிகள தேவைப்படுகிறது.

**பூசாரிப்பட்டி பணித்தளம்:**

1. பணித்தளத்தில் ஊழியம் செய்ய மிஷனெரிக்கு இருசக்கர வாகனம் தேவைப்படுகிறது.

**விழுப்புரம் மாவட்டம்:**

**கொள்ளுமேடு பணித்தளம்:**

1. ஆலயம் மற்றும் மிஷனெரி இல்லத்திற்கு மின் இணைப்பு தேவைப்படுகிறது.
2. ஊழியருக்கு இருசக்கர வாகனம் தேவைப்படுகிறது.
3. கைப்பிரதி -1000, புதிய ஏற்பாடு-100, வேதாகமம்-10, ஆராதனை கீதங்கள்-10 தேவைப்படுகிறது.

**திருவண்ணாமலை மாவட்டம்:**

**தாமரைநகர் பணித்தளம்:**

1. ஸ்ட்ரேன்ஜர் ஒன்று தேவைப்படுகிறது.
2. ஆங்கில வேதாகமம் 2 தேவைப்படுகிறது.
3. தமிழ் வேதாகமம் 10 தேவைப்படுகிறது.

4. Tracts தேவைப்படுகிறது.

## கனந்தம்பூண்டி பணித்தளம்:

1. 10 சேர்கள் தேவைப்படுகிறது.
2. மைக் 2 தேவைப்படுகிறது.
3. ஸ்பீக்கர் பாக்ஸ் ஒன்று தேவைப்படுகிறது.
4. வேதாகமம் 10 தேவைப்படுகிறது.
5. திருவிருந்து கப் 1 செட் தேவைப்படுகிறது.
6. கைப்பிரதிகள் தேவைப்படுகிறது.

## கள்ளக்குறிச்சி மாவட்டம்:

## சங்கராபுரம் பணித்தளம்:

1. பிரசங்க பீடம் தேவைப்படுகிறது.
2. மைக் செட் தேவைப்படுகிறது.
3. ஆலயத்திற்கு பீரோ ஒன்று தேவைப்படுகிறது.
4. மிஷனெரி வாகனம் பழுது பார்க்கப்பட வேண்டும்.

## மாடாம்பூண்டி பணித்தளம்:

1. LED சிலுவை தேவைப்படுகிறது.
2. மின் விசிறி இரண்டு தேவைப்படுகிறது.
3. சேர் 10 தேவைப்படுகிறது.
4. மைக் செட் தேவைப்படுகிறது.
5. கைப்பிரதி, புதிய ஏற்பாடு, வேதாகமம் தேவைப்படுகிறது.

## விழுப்புரம் மாவட்டம்:

## கொள்ளுமேடு பணித்தளம்:

1. கைப்பிரதிகள் 1000 தேவைப்படுகிறது.
2. புதிய ஏற்பாடு, சுவிசேஷப் புத்தகங்கள் 400 தேவைப்படுகிறது.
3. வேதாகமம் 10 தேவைப்படுகிறது.
4. ஆராதனை கீதங்கள் 20 தேவைப்படுகிறது.
5. வசன ஸ்டிக்கர்ஸ் 100 தேவைப்படுகிறது.
6. வசன அட்டைகள், வசன போர்டுகள் 50 தேவைப்படுகிறது.
7. ஆலய மின் இணைப்பு பராமரிக்கப்பட வேண்டும்.
8. ஆலய தரை விரிப்பு, பாய்கள் 10 தேவைப்படுகிறது.
9. சேர்கள் 20 தேவைப்படுகிறது.
10. மிஷனெரிக்கு இருசக்கர வாகனம் தேவைப்படுகிறது.

## GMS ஊழியங்களுக்கு காணிக்கை கொடுக்க விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய அபிவிருத்தி ஊழியர் விபரங்கள்.

| வ.எண் | பெயர் | சபைமன்றம் | செல் நம்பர் |
|---|---|---|---|
| 1 | சகோ.S. மாற்கு | கனோன் ஆர்தர் மார்காசியஸ் | 9842080908 |
| 2 | சகோ.M. ஜேக்கப் | Rev.T.G. ராக்லாண்ட் | 9487175131 |
| 3 | சகோதரி. உமா | Rev.T.G. ராக்லாண்ட் | 6369014234 |
| 4 | சகோ.S. காட்வின் எபனேசர் | பிஷப் ராபர்ட் கால்டுவெல் | 9790273840 |
| 5 | சகோ.K. ஏசுவடியான் | பிஷப் ராபர்ட் கால்டுவெல் | 9486186199 |
| 6 | Ä¼ï V.S. பாரத் பாபு | Dr.G.U. போப் | 9626415336 |
| 7 | சகோதரி.T. சரோஜா | Dr.G.U. போப் | 9698003415 |
| 8 | சகோ.G. பீட்டர் | Dr.G.U. போப் | 7339394536 |
| 9 | சகோ.J. பர்னபாஸ் | Evg. தாவீது சுந்தரானந்தனார் | 9487856942 |
| 10 | சகோ.T. ஈஸ்டர்ராஜ் | Evg. தாவீது சுந்தரானந்தனார் | 9445726030 |
| 11 | சகோதரி.E. சசிகலா | Evg. தாவீது சுந்தரானந்தனார் | 9489883030 |
| 12 | சகோ.S. விஜயராஜ் | Rev. ஜாண் தாமஸ் | 9677512051 |
| 13 | சகோ.R. பீட்டர் பெருமாள் | Rev. ஜாண் தாமஸ் | 8009020127 |

## தேவை! தேவை!! தேவை!!!



குளோபல் மிஷனெரி சங்கத்தில் இணைந்து பணித்தளத்தில் குடும்பமாக தங்கியிருந்து மிஷனெரி ஊழியம் செய்ய ஊழிய வாஞ்சை மற்றும் அர்ப்பணிப்புள்ளவர்கள் தேவை. தகுதியானவர்கள் அந்தந்த சேகரத் தலைவரிடம் பரிந்துரை கடிதம் வாங்கிக் கொண்டு வரவும்.

**பொதுக்காரியதரிசி, GMS**

## வாலிபர் பகுதி

**“பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.”(லூக்கா 9 : 23)**

நாம் எல்லோரும் ஆலயத்திற்கு போகிறோம், பாடல்கள் பாடுகிறோம், மணிக்கணக்காக ஜெபிக்கிறோம், ஆராதிக்கிறோம். ஆனாலும் அதற்கு நடுவில் இயேசுவின் குரலை கேட்காமல் விட்டுவிடலாம். நம் விசுவாசத்தில் ரொம்ப வசதியாக ஆகிவிடலாம். இயேசுவை கஷ்டப்பட்டு பின்பற்றாமலே ஆசீர்வாதத்தை மட்டும் எதிர்பார்க்க ஆரம்பித்து விடுவோம்.

### தன்னையே மறுதலிப்பது என்றால் என்ன?

உன்னுடைய ஆசை, உன்னுடைய திட்டம், உன்னுடைய வழி எல்லாவற்றையும் ஒதுக்கிவைத்துவிட்டு, கடவுளுடைய விருப்பம் மட்டுமே முக்கியம் என்று வாழ்வது. பலருடைய வாழ்க்கையில் இயேசு ஞாயிற்றுக்கிழமை அன்று மட்டுமே தேடப்படுகிறார். இரட்சிப்பு இலவச கொடைதான். ஆனால் அதில் வளர வேண்டுமென்றால் தினமும் கடவுளுடைய வார்த்தையும், அவருடைய பிரசன்னமும் வேண்டும். கடவுள் இல்லாமல் ஒருநாள் கூட இருக்க முடியாது என்ற நிலைக்கு வரும்போதுதான் நீ உண்மையாக அவரை தேடுகிறாய் என்று அர்த்தம்.

நாம் பலவீனமாக இருக்கும்போதுதான் அவர் பலமுள்ளவராக இருக்கிறார். நம்முடைய திறமை, கொடை எல்லாம் கடவுள் கொடுத்தது. அதை வைத்து பெருமை பேசக்கூடாது. அவருடைய மகிமைக்காக பயன்படுத்த வேண்டும்.

### பாவத்தை வெறு:

நீ உண்மையாக இயேசுவை பின்பற்ற ஆரம்பித்தால், பாவம் செய்ய வேண்டும் என்ற எண்ணமே வராது. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய தவறை காட்டிக்கொடுப்பார். பாவத்தை நல்லவனாக காட்டிக்கொள்ள தவிர்க்கக்கூடாது. உண்மையாகவே அது கடவுளுக்கு எதிரானது என்று வெறுக்க வேண்டும். உலகம் பாவத்தை சாதாரணமாக கொண்டாடுகிறது. ஆனால் நாம் அப்படி இருக்கக்கூடாது. யோசேப்புக்கு பாவம் செய்ய வாய்ப்பு கிடைத்தது. யாருக்கும் தெரியாது. ஆனால் அவன் “நான் கடவுளுக்கு உண்மையாக இருப்பேன்” என்று சொல்லிவிட்டான். நாமும் அப்படி இருக்க வேண்டும்.

“நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்.” (2 கொரிந்தியர் 13 : 5)

## வேதத்தை வாசி:

வேதம் அப்பம் போன்றது. அது இல்லாமல் நாம் பெலவீனமாகிவிடுவோம். கடவுளுடைய வார்த்தைக்கு தாகமாக இருந்தால், நம்முடைய வாழ்க்கை கடவுள் திட்டமிட்டபடி சரியாக அமையும். “அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.” (மத்தேயு 4 :4)

## மன்னித்து விடு:

மன்னிப்பது மிகவும் கஷ்டம். ஆனால் கடவுள் தரும் பலம் இல்லாமல் முடியாது. கசப்பை வைத்துக்கொண்டே இருந்தால் இருதயம் கல் போல ஆகிவிடும். “அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதர மட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்.” (மத்தேயு 18 :21-22)

**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். (ரோமர் 12 :12)**

## நம் இருதயத்தை காத்துக்கொள்ளுதல்:

நம் இருதயம் தான் பாவம் உள்ளே வரும் வாசல். நாம் என்ன பார்க்கிறோம், என்ன கேட்கிறோம், யாரோடு நேரம் செலவிடுகிறோம். எந்த பொழுதுபோக்கை பார்க்கிறோம் என்பதன் மூலமாக பாவம் உள்ளே வருகிறது. இதனால் நம் வாழ்க்கையில் நாம் எதை அனுமதிக்கிறோமோ அதனால் நம் இருதயம் பாதிக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு மட்டுமே நம் இருதயத்தை பாதுகாக்க முடியும்.

**“எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.” (நீதிமொழிகள் 4 :23)**

**Ms. பிரித்திகா ஜெபர்சன்**

ஆகஸ்டு- 2026
வேத வினா போட்டி

சரியான விடைகள்

போட்டி
எண் :129

1. எண்ணாகமம் 20 : 1
2. எண்ணாகமம் 20 : 13
3. எண்ணாகமம் 18 : 11
4. எண்ணாகமம் 17 : 14
5. எண்ணாகமம் 13 : 26
6. எண்ணாகமம் 13 : 16
7. எண்ணாகமம் 13 : 3
8. எண்ணாகமம் 12 : 14
9. எண்ணாகமம் 11 : 3
10. எண்ணாகமம் 19 : 2

## ஆகஸ்டு மாதம் சரியான விடை எழுதியர்கள் போட்டி எண்:

**தூத்துக்குடி:** ஸ்டெல்லா சூசையா, ஜான்சி ஜஸ்டின், ஹனிட்டா, சகுந்தலா, ஷீபா செல்வி, பொன்மணி டேனியேல், ரம்யா ரீனா, ஹெப்சி, சுந்தரவதி ஞானம், பவுலின் சுதாகர், டார்லிங் தனராஜ், லலிதா கோயில்பிச்சை, கலாவதி விக்டர், பொன் பரிமளா செல்வி. **நாசரேத்:** நிமிஜா சாமுவேல், ரூபவல்யா, சாந்தகுமாரி, செல்வி ஹெப்சியா, ஜெயபால், ராணி செல்வராஜ், ரூபா, மார்ஜெரி மர்காஷிஸ்,லலிதா எட்வின். **கோரம்பள்ளம்:** நான்சி தர்மராஜ், தமிழரசி செல்லத்துரை, **வேப்பலோடை:** சீலி ஜேக்கப். **பழங்குளம்:** முத்தம்மாள் துரைராஜ். **திருநெல்வேலி:** ரூத் ஜெயராணி அன்புராஜ், ஜெபா நியூட்டன், ஜேன் தர்மராஜ். **வெள்ளாளன்விளை:** சிசிலித்தாய், பிரேமாவதி ஜனஹர், சுசிலா ஜாண். **கொட்டல்காடு:** மஞ்சுலா. **ஓட்டபிடாரம்:** அனிதா ஜாய்ஸ், நோவா மல்லிகா. **கோவில்பட்டி:** நவரோஜி வீரபாண்டியன், தெய்வானந்தம். **குளத்துக்குடியிருப்பு:** செல்லம்மாள் ஞானையா. **திருச்சி:** ஜெபசீலி ஜெயக்கொடி. **ஆறுமுகநேரி:** இந்திரா மோகன். **பழனியப்பபுரம்:** ராஜம்மாள், செல்வி. **நல்லூர்:** செல்வி தேவராஜன், மார்கரேட் செல்வகுமார், ஜெபா ராஜசேகர். **ஏரல்:** இன்பராணி, மதுபாலா சந்தனபால். **சாத்தான்குளம்:** காமினி டேவிட், கெசியா ரூத், எமி பர்னபாஸ், லதா நெல்சன், ரெத்னாவதி முத்துராஜ், ஜோதி மனோகரன், ஜெபக்கனி அன்னாள், சுகுணாபாய் நோவா. **ஆனந்தபுரம்:** சரோஜினி ஸ்டீபன். **நகலாபுரம்:** பியூலா தனராஜ். **மூக்குப்பீறி:** செல்லமணி அல்பர்ட், பாக்கியராஜ், ஜாய்ஸ் ஜாண்சன். **கருங்கடல்:** அனிதா கிளாடிஸ், எப்சியா ஜெரின், இம்மானுவேல். **பண்டாரஞ்செட்டிவிளை:** ஞானசீலி ரண்டல், சுலோச்சனா, மேரி பிரபா. **கடையனோடை:** ஜெனிபர் சுதர்ஷா. **உடன்குடி:** பொன்முத்து ஞானசேகர். **ஆனைமலை:** ஜான்சி. **நெடுங்குளம்:** டல்சி பாப்பா. **புதுச்சேரி:** பியூலா ஜேசுராஜன். **மெஞ்ஞானபுரம்:** ரவீந்திரா ஜோசப், பியூலா பஞ்சபதி. **பிள்ளையன்மனை:** ஷேபா கோயில்பிச்சை. **சத்தியநகரம்:** டிசில்லா ஞானதுரை.

## ஆகஸ்டு – 2026 பரிசு பெற்றவர்கள்

குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

1. திருமதி. ராஜம்மாள் - பழனியப்பபுரம்
2. திருமதி. தமிழரசி - கோரம்பள்ளம்
3. திரு. இம்மானுவேல் - கருங்கடல்

# திருமறையில் தேடுவோம்

## ( எண்ணாகமம் 21 முதல் 30 வரை)

வேத வினா
போட்டி எண் - 129
ஆகஸ்டு-2026

**கேள்விக்கு ஏற்ற பதில் எழுதவும்:-**

1. ஆராக் என்பதின் மறுபெயர் என்ன?
2. நீரோடையை குறித்த வசனம் இடம்பெற்றுள்ள புத்தகம் எது?
3. பிலேயாமின் ஊர் எது?
4. பிலேயாம் எத்தனை முறை இஸ்ரவேலரை ஆசீர்வதித்தான்?
5. 24,000 பேர் வாதையினால் செத்த இடம் எது?
6. ஊரீம் என்றால் என்ன?
7. தன் வாசஸ்தலத்தை கன்மலையில் கட்டியது யார்?
8. அம்ராமுடைய பிள்ளைகள் பெயர் என்ன?
9. இஸ்ரவேலின் ராஜா யாரை பார்க்கிலும் உயருவான்?
10. தேவன் யாக்கோபிலே எதைக் காண்கிறதில்லை?

அனுப்ப வேண்டிய முகவரி தயவு செய்து வெட்டி ஒட்டவும்

தொடர்புக்கு :
போன் : 0461 - 2328911

Question Answer
**Global Missionary Society**
368/11, W.G.C. Road, Opp. Telegraph Office
Thoothukudi - 628 001

**குறிப்பு**

- **பதில் எழுதுபவர்கள் சரியான இடத்தையும் சரியான வார்த்தையையும் எழுத வேண்டும்.**
- **ஒன்று இரண்டு வார்த்தையில் மட்டும் பதில் இருக்க வேண்டும்.**
- **தலைப்பும் மாதமும் எழுதவேண்டும்.**
- **போஸ்ட் கார்டில் எழுத வேண்டாம்.**
- **20.09.2026-க்குள் விடைகள் வந்து சேர வேண்டும். அதற்குப் பின்வரும் பெயர்கள் பிரசுரிக்கப்படமாட்டாது.**
- **பதில் எழுதுகிற தாளில் உங்கள் முகவரியையும், தொலைபேசி எண்ணையும் தெளிவாக எழுத மறக்க வேண்டாம்.**

இரட்சிப்பை பிரசித்தப் படுத்துபவர்களின் வரிசையில் உங்கள் மிஷனெரி

**03**

# சகோ. C. பவுல் விஸ்வநாதன் குடும்பம்



என் பெயர் பவுல் விஸ்வநாதன். நான் தருமபுரி மாவட்டம், இருளப்பட்டி என்ற கிராமத்தில் செல்ல குட்டி, சித்தாய் என்ற பெற்றோருக்கு ஆறாவது மகனாக பிறந்தேன். சிறு வயது முதல் கடவுள் பக்தி அற்றவனாக வாழ்ந்து வந்தேன். என்னுடைய 17-வது வயதில் அருகில் உள்ள நூற்பாலையில் சேர்ந்து வேலை செய்தபோது அரசியல் மற்றும் தொழிற்சங்க தலைவர் என வாய்ப்புகள் கிடைத்தது. இதை தவறாக பயன்படுத்த ரவுடிதனமான செயல்கள் மற்றும் கெட்ட பழக்கவழக்கங்களுக்கு அடிமையானேன்.

இந்நிலையில் எனக்கு திருமணமானது. சில காலங்கள் கழித்து என் மனைவி அசுத்த ஆவியின் போராட்டத்தினால் மிகவும் பலவீனமடைந்ததால் பல மருத்துவமனைகள் மற்றும் பக்தி மார்க்க வழிபாடுகள் என என் உடலை வருத்திக்கொண்டு பல லட்சங்கள் செலவு செய்தும் விடுதலை கிடைக்கவில்லை. இந்த நிலையில் என்னுடைய அக்கா சரஸ்வதி இயேசுவை குறித்து சொன்னபோது அவர்களுக்கு எதிராக மாறி என் மனைவியை என் மாமனார் வீட்டில் விட்டுவிட்டேன். அங்கு அருகில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்கு செல்வதற்கான ஆலோசனை கிடைத்து அங்கு சென்றதினால் அற்புதமான விடுதலை கிடைத்தது. இதை அறிந்து எனக்கு இயேசுவின் மீது நம்பிக்கை ஏற்பட்டது. பின்பு நானும் கிறிஸ்தவ ஆலயத்திற்கு செல்ல ஆரம்பித்தேன்.

இந்நிலையில் 2000-ம் ஆண்டு சேலத்தில் நடந்த கூட்டத்தில் டி.ஜி.எஸ். தினகரன் அவர்கள் மூலம் கர்த்தர் என் பெயரை சொல்லி ஊழியத்திற்கு அழைத்தார். அது என்னை முழுமையாக ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்க வைத்தது. பின்பு சிறுவர் ஊழியத்தை வேலை செய்துகொண்டே செய்து வந்தேன். பின்பு என் வேலையை ராஜினாமா செய்துவிட்டு 2006-ஆம் ஆண்டு முதல் குளோபல் மிஷனெரி சங்கத்தில் இணைந்து கோட்டமேடு, இராமயஹள்ளி, பாலசமுத்திரம், குருபரஹள்ளி, சிந்தல்பாடி, போச்சம்பள்ளி, வடகரை, காளிப்பேட்டை, மூக்காரெட்டிபட்டி ஆகிய பணித்தளங்களிலும் தற்பொழுது நாகலூர் பணித்தளத்திலும் மிஷனெரி ஊழியத்தை செய்துவருகிறேன்.

எனக்கு லட்சுமி மார்த்தாள் என்ற மனைவியும், ஸ்டெல்லா மேரி, விக்டர் பவுல்ராஜ் என்ற இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள். இரண்டு பிள்ளைகளுக்கும் திருமணம் முடிந்துவிட்டது. இதில் இரண்டாவது மகன் விக்டர் பவுல்ராஜ் இறையியல் கல்லூரி முடித்து நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தில் மிஷனெரியாக குடும்பமாக பணியாற்றி கொண்டிருக்கிறான். எங்களுக்காக, ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

# தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டடிப்பட்டி பணித்தளத்தில் நடைபெற்ற ஞானஸ்நானம்







நாசரேத் சேகரத்தில்
நடைபெற்ற மிஷனெரி
விற்பனை விழா

சிதம்பரநகர் சேகரத்தில் நடைபெற்ற மிஷனெரி
ஆதரவு விற்பனை விழாவை பொதுக்காரியதரிசி
ஐயா அவர்கள் முன்னிலையில்
சகோ. A.ராஜேஷ் ஆசீர்வாதம் (மேலாளர்- C&F
ராஜா ஏஜென்சி தூத்துக்குடி)
அவர்களால் திறந்து வைக்கப்பட்டது









பிள்ளையன்மனை சேகரத்தில்
நடைபெற்ற மிஷனெரி
விற்பனை விழா


**Rev. V. சாமுவேல் ரவிராஜ்** M.A., M.Sc., M.S.W., LLB., B.D.,m

பொதுக்காரியதரிசி, செல் : 9487674959

TND குளோபல் மிஷனெரி சங்கம், 368/11, W.G.C. ரோடு,
தந்தி ஆபீஸ் எதிர்புறம், தூத்துக்குடி – 628 003.
போன் : 0461 – 2328911

website: www.tndgms.org / e-mail :tndgms@gmail.com TND Global Missionary Society - GMS


Prakash Graphics - 99940 77782